10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 274 வியாழக்கிழமை 22 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

போதை இலங்கை

கொழும்பு, பெப். 22

நாட்டின் மது பாவனை 12 வீதத்தால் அதி கரித்துள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் மதுவுக்கான வரி குறைக்கப்பட்ட பின்னரே இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாக மதுவரித் திணைக் களத்தின் தரவுகள் மூலம் அறியப்படுகின்றது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 18 வீதத்தினர் மதுவை நுகர்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, சுகா தார அமைச்சருக்கு அறிக்கை அனுப்பவுள்ள தாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச)

குண்டு வெடிப்பு

12 படையினர், 5 பொதுமக்கள் படுகாயம்

யாழில் இருந்து சென்ற பஸ்ஸில் பயங்கரம்

தியத்தலாவ, பெப்ரவரி 22,

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த பஸ்ஸில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 12 படையினரும், 5 பொதுமக்களுமாக 17 பேர் படுகாயமடைந்தனர். தியத்தலாவ பிரதேசத்தில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பஸ் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் பஸ் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பஸ்ஸின் கண்ணாடிகள் வெடித்துச் சிதறியதாலும் தீயினாலும் பயணித்த 7 இராணுவத்தினர், 5 விமானப் படையினர், 5 பொதுமக்கள் காயமடைந்தனர்.

பயணித்த இராணுவத்தினரில் ஒருவர் கொண்டு சென்ற கைக்குண்டு வெடித்தே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது. அதனை அவர், களவாகக் கொண்டு சென்றிருக்கலாம் என்றும் கூறப்பட்டது. காயமடைந்தவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச – இ)

பயங்கரவாத தாக்குதல் அல்ல

மறுக்கிறது இராணுவம்

தியத்தலாவ, பெப்.22,

தியத்தலாவ பஸ் குண்டுவெடிப்பு பயங் கரவாதச் செயல் அல்ல என்றும், இது தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என்றும் இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய படை யினர் தம்முடன் எடுத்து வந்த கைக்குண்டே வெடித்திருக்கலாம் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார். (இ)

பயங்கரவாத தாக்குதலாம்

தியத்தலாவ, பெப்.22,

தியத்தலாவ பஸ்குண்டுவெடிப்பு தேசிய பாதுகாப்புக்க விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என மகிந்தவின் கட் சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி தெரிவித்துள்ளது.

9 வருடங்களுக்கு முன்னர் நில விய யுத்த கலாசாரம் நல்லாட்சி அர சாங்கத்தின் சுவனக்குறைவால் மீண் டும் உருவாகப் பார்ப்பதாக அக்கட் சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கூறியிருக்கிறார்.

அந்தக் கட்சியின் சார்பில் நேற்று அவர்

06▶

9 வயது மாணவி வன்புணர்வு

அதிபருக்கு 10 வருட கடுழியம்

யாழ்ப்பாணம், பெப். 22

9 வயதே ஆன மாணவியை வன்புணர் வுக் கொடுமை செய்த அதிபருக்கு 10 ஆண்டு கடுழியச் சிறைத் தண்டனை விதித்தது யாழ். மேல் நீதிமன்றம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு, ஊர்காவற் றுறை நாரந்தனை ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்ற மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

பாடசாலை அதிபரே இந்தக் கொடுமை யைச் செய்தார் என்பது சிறுமியின் வாக்கு மூலத்திலும், டி.என்.ஏ. சோதனைகளிலும் உறுதியானது. இந்த வழக்கு விசாரணை யின் தீர்ப்பு நேற்று மன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன் விசாரணைக்கு எடுக் கப்பட்டது.

குற்றவாளியான அதிபருக்கு 10 ஆண்டு கடுழியச் சிறையும், பாதிக்கப்பட்ட சிறு மிக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடும் வழங் கத் தவறின் 2 வருட கடுழியச் சிறையும் தண்டமாக 5 ஆயிரம் ரூபாவும், செலுத் தத் தவறின் ஒரு மாத கடுழியச் சிறையும் விதித்து தீர்ப்பளித்தார் நீதிபதி. (ச - இ)

ஆதரவு தாருங்கள் உறவுகள் கோரிக்கை

வவுனியா, பெப். 22

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு கள் வவுனியாவில் நடத்தும் போராட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமையுடன் ஒரு வருடம் நிறைவடைகிறது. இதை யொட்டி தமது போராட்டத்துக்கு ஆத ரவு தருமாறு போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம் பித்து சனிக்கிழமையுடன் ஒரு வருடம் நிறைவடைகிறது. அன்றைய தினம் வர்த் தக நிலையங்கள், தனியார் மற்றும் இ. போ.ச பேருந்துகளிலும் ஏனைய நிலை யங்களிலுள்ள உறவுகள், முச்சக் கர வண்டிச் சங்கங்கள், பொது

06▶

இதிலும் யாழ்ப்பாணம் வடக்கில் முதலிடம்

யாழ்ப்பாணம், பெப்.22,

வடக்கில் அதிக துஷ் பிரயோகங்கள் இடம் பெறும் மாவட்டமாக யாழ்ப்பாணமே உள்ளது. சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக் களப் புள்ளி விவரங்கள் இதனைச் சுட்டிக்காட் டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் 45, கிளிநொச்சியில் 30, வவுனியாவில் 27, மன் னாரில் 11, முல்லைத் தீவில் 10 என வடக்கில் 123 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

06▶

பிரியாது தொடர்வோம்

ரணில் – அமரவீர கூட்டாக அறிவிப்பு

கொழும்பு, பெப்.22,

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சேர்ந்து உருவாக்கிய தேசிய அரசாங்கம் இன்னமும் நடைமுறையிலேயே உள்ளது. அது தொடரும் இரு கட்சிகளும் அறிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும்

06▶

வாக்குறுதியை நிறைவேற்றுக!

இலங்கையிடம் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 22

நிலைமாறு கால நீதிப் பொறி முறை தொடர்பில் அளித்த வாக் குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என ஐரோப்பிய ஒன் றியம் வலியுறுத்தியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், நிலைமாறு கால நீதிப் பொறி முறை தொடர்பில் இலங்கை அரசு முன்னர் வாக்களித்திருந்தது.

இந்த உறுதிமொழியையே நிறைவேற்றுமாறு தற்போது வலி யுறுத்தப்படுகின்றது. ஐரோப் பிய ஒன்றியத்தின் ருவிற்றர் பக் கத்தில் இந்தப் பதிவு இடப்பட் டுள்ளது. (ச)

மிரட்டல் பிரிகேடியர் திருப்பியழைப்பு

கொழும்பு, பெப். 22

கழுத்தை அறுப்பேன் என லண்டனில் புலம்பெயர் மக்களுக்கு சைகை காட்டிய பிரிகேடியர்பிரியந்த பெரேராண்டோ கொழும் புக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் சுதந்திர நாளன்று லண் டனில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கைத் தூதரகம் முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரான பிரியந்த, புலம் பெயர் தமிழர்களைப் பார்த்து

06▶

மூடப்பட்ட மைத்திரியின் கதவுகள்

எம்.ஜ.எம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் இவ்வாறுதான் அமையும் என்று எதிர்பார்க்கப் பட்டது. முதலாமிடம் யானை, இரண்டாமிடம் கை, மூன்றாமிடம் மொட்டு. ஆனால், எதிர்பார்ப்புக்கள் – ஊகங்கள் எல்லாம் தலைக்கீழாக மாறியுள்ளன. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு மகிந்த முதலாமிடத்துக்கு வந்துள்ளார். ரணில் இரண்டாமிடத்துக்கும் மைத்திரி மூன்றாமிடத்துக்கும் வந்துள்ளனர்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரசு ஒன்று குட்டித் தேர்தலில் தோல்வியடைந்த சம்பவம் இதுதான். 2015 ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் மகிந்த இந்தத் தேர்தலில் எட்டு லட்சம் வாக்குகளை குறைவாகப் பெற்றும்கூட அவரே இதில் வெற்றி பெற்றுள்ளார். காரணம் என்ன? அன்று மைத்திரிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் மகிந்தவுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளுள் எட்டு லட்சம் வாக்குகளும் ஜே.வி.பி உள்ளிட்ட பல கட்சிகளுக்கு பிரிந்து சென்றுள்ளன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்களில் இந்த அரசு மேற்கொண்ட மக்கள் விரோத செயற் பாடுகளே இந்த நிலைக்குக் காரணம்.மகிந்தவைத் திருடர் என்று கூறிக்கொண்டு தாங்கள் திருட்டில் ஈடுபட்டமையும் மகிந்தவின் ஆட்களைத் தண்டிக்கா மல் விட்டமையும் மகிந்த நல்லவர் என்றொரு மாயையை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டது.

ரணிலும் மைத்திரியும் கூட்டரசின் பங்காளிகள் என்ற போதிலும், மைத்திரி ஆட்சியில் சம பங்கை எடுக்கவில்லை. ரணிலை ஆடவிட்டுவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். அளவுக்கு அதிகமான நெகிழ்வுத் தன்மை, தேவையற்ற பொறுமை என்பன மைத் திரியை மக்கள் வெறுக்கும் நிலையை ஏற்படுத்தி விட்டது.

இருக்கின்ற மீதி இரண்டு வருடங்களுக்குள் அரசை சரியான பாதையில் இட்டுச் சென்றால் இப்போதைய தேர்தல் முடிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இருந்தாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு சிக்கல் ஒன்று இருக்கவே செய்கிறது.

மகிந்த தரப்பில் பஸிலோ அல்லது கோத்தாவோ களமிறக்கப்படுவர். இருவரில் யார் இறங்கினாலும் மகிந்த இறங்கினால் எவ்வளவு வாக்குகளை எடுப்பாரா அதே வாக்குகளை அவர்கள் எடுப்பர். ஆனால், அரசு பக்கம் நிலைமை அவ்வாறில்லை.

மீண்டும் தரமான பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் மாத்திரமே அரச தரப்பால் வெற்றி பெற முடியும். இருந்தாலும் இந்தத் தடவை இது சாத்தியப்படாது. ஐக்கிய தேசிய கட்சி தனித்தே களமிறங்கும். அந்தக் கட்சி இரண்டு தடவைகள் வேட்பாளர்களை வெளியில் இருந்தே இறக்குமதி செய்து பொது வேட்பாளர்களாக நிறுத்தியது. 2010 இல் சரத் பொன்சேகா, 2015 இல் மைத்திரிபால சிறிசேன. 2010 இல் தோல்வியடைந்தபோதிலும், 2015 இல் வெற்றி பெற்றது.

அந்த வெற்றியைக் கொண்டு கட்சியைப் பலப் படுத்தி 2020 ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட் பாளரையே களமிறக்குவது என்ற தீர்மானத்தை ஐக்கிய தேசிய கட்சி அப்போதே எடுத்துவிட்டது. மூன்றாவது தடவையும் பொது வேட்பாளர் ஒருவ ரைக் களமிறக்குவது கட்சிக்குத் தலைகுனிவாக அமையும் என்று அக்கட்சி கருதுகிறது. இதனால் ரணிலோ அல்லது வேறு வேட்பாளரோ ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் களமிறக்கப்படுவர்.

அவ்வாறு நடந்தால் சுதந்திரக் கட்சியின் சார் பில் மைத்திரி போட்டியிடுவார். இந்த இரண்டு வேட்பாளர்களும் தோல்வியடைந்து மகிந்தவின் வேட்பாளர் மிக இலகுவாக வெற்றி பெறுவார்.

இருந்தும், ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் வெற்றிபெறுவதற்கு வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. அப்படியென்றால் ஐக்கிய தேசிய கட்சி தேசிய அரசில் இருந்து விலகி தனி அரசை அமைக்க வேண்டும்.அந்தத் தனி அரசு அபிவிருத்தி, அரசியல் மற்றும் ஊழல்வாதிகளுக்குத் தண்டனை வழங்கு தல் போன்ற மக்கள் எதிர்பார்க்கும் அனைத்து விடயங்களையும் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்தால் மகிந்தவின் வாக்கு வங் கியை சரித்து ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு வங்கியை அதிகரிக்கச் செய்ய முடியும். ஜனாதிபதித் தேர்தல் என்ற ஒன்று வரும்போது தமிழ்–முஸ்லிம் மக்கள் அனைவரும் ஐக்கிய தேசிய கட்சிக்கே வாக்களிப்பர்.

மகிந்த தரப்பில் கோத்தபாய களமிறப்பட்டால் தமிழ்–முஸ்லிம் மக்களின் வாக்குகளை அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்கத் தேவையில்லை. மகிந்தவைவிட கோத்தாவே இந்த மக்களால் இன வாதியாகவும் கடும்போக்காளராகவும் பார்க்கப்படு கின்றார். இந்த இரண்டு காரணங்களால் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

ஆனால், மைத்திரி வெற்றி பெறுவதுதான் கஷ்ட மான ஒன்று. இப்போதைய தேர்தல் முடிவுகளின்படி, ஜனாதிபதித் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் அது மொட்டுக்கும் யானைக்கும் இடையிலேயே போட்டியாக அமையும். மைத்திரி யாருக்கும் போட் டியாக அமையமாட்டார்.

மைத்திரி வெல்ல வேண்டும் என்றால் அவர் மகிந்த தரப்பை இணைத்து முழுமையான– ஒன்றி ணைந்த சுதந்திரக் கட்சிக்குள் இருந்து வேட்பாள ராகக் களமிறங்க வேண்டும். அல்லது 2015 ஜனா திபதித் தேர்தலைப்போல் ஐக்கிய தேசிய கட்சியை யும் ஏனைய கட்சியையும் இணைத்துக் கொண்டு மீண்டும் பொது வேட்பாளராகக் களமிறங்கவேண்டும்.

இந்த இரண்டில் எது நடந்தாலும் மைத்திரி வெல்வார். ஆனால், இந்த இரண்டில் ஒன்றுகூட நடப்பதற்கு வாய்ப்பில்லை.

சுதந்திரக் கட்சியுடன் இணையாமலேயே தம் மால் வெல்ல முடியும் என்ற நிலைக்கு மொட்டு வந்துள்ளது.மொட்டும் கையும் சேர்ந்தால் அது கைக்குத்தான் நன்மையே தவிர மொட்டுக்கு அல்ல. மொட்டால் தனித்து நின்றே சாதிக்கமுடியும் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதனால் மகிந்த தனது சகோதரர்களை இறக்கி அவருக்கான தனி ராஜ்யம் ஒன்றை அமைக்கவே விரும்புகிறார்.

தன்னிடம் இப்போதுள்ள வாக்கு வங்கியை வைத்து மைத்திரியை ஜனாதிபதியாக்க வேண்டிய தேவை மகிந்தவுக்கு இல்லை. சுதந்திரக் கட்சி மகிந்தவுக்கு கிடைத்தாலும் ஒன்றுதான் கிடைக்கா விட்டாலும் ஒன்றுதான். மொட்டு ஒன்றே மகிந்தவுக் குப் போதும் என்ற நிலை வந்துள்ளது. இதனால் மொட்டு கையின் பின்னால் செல்லாது.

அப்படியென்றால் மைத்திரியின் அடுத்த தெரிவு முன்புபோல் பொது வேட்பாளராக இறங்குவதுதான். ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவு இன்றி அந்தத் தெரிவு சாத்தியப்படாது. ஆனால், ஐக்கிய தேசிய கட்சி தனித்தேதான் களமிறங்கும்.

கட்சிக்குள்ளும் ஆட்சியிலும் சில காத்திரமான மாற்றங்களை செய்தால் ஐக்கிய தேசிய கட்சியால் தனித்து நின்று வெற்றி பெற முடியும்.இருக்கின்ற இரண்டரை வருடங்களை சரியாகப் பயன்படுத்தி னால் இது சாத்தியப்படும்.

இந்த நிலை ஏற்படும்போது மைத்திரியும் சுதந் திரக் கட்சியில் தனித்துத்தான் களமிறங்க வேண்டி வரும். அது மைத்திரிக்கு தோல்வியையே கொடுக் கும். இருக்கின்ற 13 அல்லது 15 லட்சம் வாக்குக ளைக் கொண்டு மைத்திரியால் எதுவும் செய்ய முடியாது.

அப்படியென்றால் மைத்திரி தேசிய அரசைக் கவிழ்த்துவிட்டு தனி அரசை அமைக்க வேண்டும். அதுவும் சிக்கல்தான். ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு ஆறு ஆசனங்கள் மட்டுமே தேவை.அந்த எண்ணிக்கையைத் திரட்டுவது அக் கட்சிக்கு கடினமான காரியமல்ல. ஆனால், மைத்திரி தனித்து ஆட்சி அமைப்பதென்றால் 70 இற்கு மேற் பட்ட ஆசனங்கள் தேவை. 70 ஐ திரட்டுவது மிகக் கடினம்.

மகிந்த வெற்றியின் விளிம்பில் இருப்பதால் அவரது கட்சியில் இருந்து எவரும் மைத்திரியுடன் இணையமாட்டார்கள். ஜே.வி.பி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை நினைத்துக் கூடப் பார்க்கத் தேவையில்லை. ஆகவே, தனித்து ஆட்சி அமைப்பது அவருக்கு சாத்தியமாகாது.

இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் வெற் றியை அடைய முடியாத சூழ்நிலையே அவருக்குக் காணப்படுகிறது. மைத்திரிக்கு இறுதியாக ஒரேயொரு தெரிவுதான் உண்டு.

தனித்துப் போட்டியிட்டு தனக்கு இருக்கின்ற 13 அல்லது 15 லட்சம் வாக்குகளை வீணடிப்பதைவிட அதை ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்குப் பயன் படுத்திவிட்டு அதற்கு பதிலாக பிரதமர் பதவியைப் பெறுவதுதான் புத்திசாலித்தனம்.

ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குகளைக் கொண்டு மைத்திரியை ஜனாதிபதியாக்கியமைக்காக எவ் வாறு ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டதோ அதேபோல் சுதந்திரக் கட்சியின் வாக்குகளை பயன் படுத்தி ரணிலை ஜனாதிபதியாக்கிவிட்டு அதற்குப் பலனாக பிரதமர் பதவியை மைத்திரியால் பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு செய்தால் மகிந்த தரப்பை மிக இலகு வாகத் தோற்கடிக்க முடியும். தானும் ஆட்சி அதி காரத்தில் இருக்க முடியும். இதைத் தவிர வேறு எந்தத் தெரிவும் அவருக்கு இல்லை. அவர் மீண்டும் ஜனாதிபதியாவதற்கான எல்லாக் கதவுகளும் அடைக் கப்பட்டுள்ள நிலையில் பிரதமர் ஆவதற்கான கதவு ஒன்றுதான் திறந்திருக்கின்றது. ■

எதிரொலி
Ethiroli
வியாழன் 22 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

ஏட்டுச்சுரைக்காய் கல்வியதிகாரிகள்

ஏட்டுச்சுரைக்காய் தான் கறிக்குதவும் என்று நம்புகின்ற ஒரு சமூகத்தின் மத்தியில் தான் நாம் இன்றும் வாழ்ந்து வருகின்றோம். பொதுவாகவே இந்த ஏட்டுச்சுரைக்காயை அதிகமாக நம்புபவர்கள் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறார் கள். அதுவும் உயர் பதவிகளில் குந்தியிருந்துகொண்டு அவர்கள் செய்யும் அழிச்சாட்டியங்கள் பல. தன் மேதமைத் தனத்தை, ஒரு பாடசாலையின் உதைபந்தாட்ட அணியைக் கலைக்குமாறு உத்தரவிட்டுக் காட்டியிருக்கிறார் வலய மொன்றின் கல்விப் பணிப்பாளர்.

குறித்த மகளிர் கல்லூரியில் உள்ள உதைபந்தாட்ட அணிகள் சாதாரண கத்துக்குட்டி அணிகள் என்றாலும் பர வாயில்லை, தேசிய ரீதியாகச் சாதனை படைத்தவை. அப் படிப்பட்ட ,கல்லூரிக்குப் பேரும் புகழும் வாங்கிக் கொடுத்த மகளிர் உதைபந்தாட்ட அணிகளை, உடனடியாகக் கலைத் துவிடுமாறு, அந்தக் கல்விப் ணிப்பாளர் உத்தரவிட்டமைக்கு காரணம், "பிள்ளைகள் விளையாட்டுக்கு முன்னுரிமை கொடுப்பதாலேயே அந்தப் பாடசாலையின் கல்வித் தரம் பின்னடைவைச் சந்திக்கிறது" என்பதே.இதெல்லாம் ஒரு காரணமா, என்று பலருக்குச் சிரிப்பு வந்தாலும் , சீரியஸாக அந்த உத்தரவைப் போட்டு, இறுதிப்போட்டியில் விளையாட இருந்த பிள்ளைகளின் கனவைக் குலைத்த கல்விப் பணிப்பாளரின் அறிவை என்னவென்பது?

பாடசாலையின் 'நலனை' விரும்பும் சிலர் 'போட்டுக் கொடுத்த 'தகவல்களின் அடிப்படையிலேயே அந்தக் கல்விப் பணிப்பாளர் இப்படியொரு முடிவை எடுத்துள்ளார். இந்த முடிவை எடுப்பதில் சிலவேளைகளில் மற்றவர்களுக்குத் தெரிந்திராத சில ரகசியங்களும் இருக்கக்கூடும். ஆனால் அப்படி ஒரு முடிவை எடுத்தோம் கவிழ்த்தோம் என எடுப்பதோ, மாணவர்கள் இறுதிப் போட்டி ஒன்றில் பங்கேற்க முனைகையில் அதைக் குழப்புவதோ எந்த வகையிலும் நியாயப்படுத்தமுடியாத ஒன்று. சரி, அந்த இறுதிப்போட்டியில் பங்கேற்று முடியும் வரைக்குமாவது, உதைபந்தாட்ட அணி யைக் கலைக்கும் முடிவை ஆறப்போட முடியாதளவுக்கு என்ன அவசரம்?

ஒரு பாடசாலை என்பது அதன் கல்வித்தரத்தால் மட்டும் நல்லபெயரை எடுப்பதில்லை. விளையாட்டு, இணைப்பாடச் செயற்பாடுகள், கலை, கலாசார நிகழ்வுகள், விழாக்கள் என அங்கு இடம்பெறும் சின்னச் சின்ன விடயங்களும் மாணவர்களுக்கு வாழ்க்கையின் பல்வேறு பக்கங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டி, அவர்களைச் சிறந்த பிரஜைகளாக்க முனைகின்றன. தனியே புத்தகப்புழுவாக மாணவனை ஒருவகுப்பறைக்குள்ளேஅடைத்துவைத்திருக் கும்பழக்கம் எந்தக் கல்வி முறையிலும் இல்லை. முன்னைய குருகுலக் கல்வி முறையில் கூட, சாதாரண கல்வியுடன், போர்க்கலை,ஏனையகலைகள்,விளையாட்டுஎன்பவற்றுக் கும் சம இடம் வழங்கப்பட்டே இருந்தது. ஏனெனில் கல் வியின் நோக்கமே மாணவர்களை முழுமையான மனிதர் களாக மாற்றுவதுதான். அதற்கு, கல்வியோடு ஏனைய துறைகளிலும் மாணவர்கள் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங் களை ஆசிரியர்களும், கல்விச் சமூகத்தினருமே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதைவிட்டு, சர்வாதிகாரி போல ஒரு கல்வியதிகாரி மாணவர்களின் வாழ்க்கையுடன் விளை யாடும் முடிவுகளை எடுத்து, அதை உடனேயே நடை முறைக்கு கொண்டுவர வேண்டும் எனப் பிடிவாதம் பிடிக் கக்கூடாது. இப்படியான கல்வியதிகாரியின் கண்டுப்பை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கூட காட்டியிருக்க மாட்டார்கள். இப்படி ஏட்டுச்சுரைக்காயைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் கல்விப் பணிப்பாளர்கள் இருக்கும் வரை யில் நம் மாணவர்கள் குண்டுச்சட்டிக்குள் குதிரை யோட்டிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

நாளையே இறுதி நாள்

கொழும்பு, பெப்.22

2018 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற் கும் நடவடிக்கை நாளையுடன் நிறைவடைவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் பாடசாலை விண் ணப்பதாரிகள் பாடசாலை அதிபர் கள் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப் பதாரிகள் சுயமாகவும் விண்ணப் பிக்க முடியும்.

நாளைக்கு முன்னர் விண்ணப் பங்களை பரீட்சைகள் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்குமாறும், பிந்திக் கிடைக்கின்ற விண்ணப்பங் கள் எக்காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)

இலவச காட்சியாக சிறுவர் நாடகங்கள்

யாழ்ப்பாணம், பெப். 22

சிறுவர்களுக்கான இரு நாடகங் கள் யாழ். பொது நூலகத்தில் நாளை (23) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அரங்கேறவுள்ளன.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கூடி விளையாடு பாப்பா" தே.தேவா னந்தின் "அலைமீதேறி ஆனந்தப் பயணம்" ஆகிய நாடகங்களே இல வசக் காட்சியாக அரங்கேறுகின்றன.

சிறுவர்களின் உளவிருத்திக்கான மகிழ்வூட்டலையும் அறிவூட்டலை யும் அடிப்படையாகக் கொண்ட இந்தச் சிறுவர் நாடகங்கள் செயல்திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் யாழ். பொது நூலகத் தின் அனுசரணையில் மேடையேறு கின்றன. (ச)

நாங்களே காரணம்

மன்னார், பெப்.22

"மன்னார் மாவட்டத்தில் உள்ளூ ராட்சி சபை ஒன்றை, 42 ஆண்டுக ளுக்கு பிறகு தேசியக் கட்சி ஒன்றால் வென்றெடுக்கப்பட்டமைக்கு தற்போதைய தமிழ்த் தலைமை களும் மாவட்டத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் என்னைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுமே பொறுப்புக் கூற வேண்டும்" என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மன்னார் மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்து வெளியிட்டபோதே அவர் இவ் வாறு கூறினார். (அ)

பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப்.22

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டதுடன் பேரணியாக வும் சென்றனர்.

சைட்டம் நிறுவனத்தை மூடுதல் மற்றும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள மாணவர்களை விடுவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து அவர்கள் இந்தப் போராட் டத்தை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக அங்கு போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், கொழும்பு வோர்ட் பிளேஸ் வீதியில் பொரளை நோக்கி செல்லும் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டது. (இ)

மட்டக்களப்பு மாநகர சபை

மேயராகிறார் சரவணபவன் துணைமேயர் ரெலோவுக்கு

மட்டக்களப்பு, பெப்.22,

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக தியாக ராசா சரவணபவனை நிய மிக்க தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு தீர்மானித் துள்ளது.

மாநகர முதல்வரைத் தெரிவு செய்வது தொடர்பாக தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் பதவிக்கு தியாக ராசா சரவணபவனை முன்மொழிவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவர், கல்லடி - 13ஆவது வட் டாரத்தில் இருந்து மட்டக்களப்பு மாநகரசபைக்கு அதி கப்படியான பெரும் பான்மை வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட் டிருந்தார். 48 வயது டைய தியாகராசா சரவ ணபவன், 1971ஆம் ஆண்டு தொடக்கம், 1973ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர முதல்வராக பதவி வகித்த கந்தையா தியாகராசா வின் மகனாவார்.

அதேவேளை, பிரதி முதல்வர் பதவிக்கு ரெலோவைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்குவதெனவும் இந்த க் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட் டுள்ளது. (இ)

கர்ப்பவதி ஹம்சிகா கொலை வழக்கு: இன்னமும் சி.ஐ.டி. வசமாகவில்லை

ஊர்காவற்றுறை, பெப். 22

ஊர்காவற்றுறையில் கர்ப்பவதி ஹம்சிகா படுகொலை வழக்கின் விசாரணையை பாரமெடுப்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் அனுமதி கிடைக்கவில்லை எனக் குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன் றுக்கு அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில், நீதிவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலை யில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது மன்றில் தோன்றிய குற்றப் புலனாய்வு அதிகாரி, இந்த வழக்கின் விசாரணையை குற்றப் புலனாய்வு பிரிவு பாரமெடுக்க வேண்டுமாயின் அதற்கான அனுமதி பொலிஸ்மா அதிபர் ஊடாக வழங் கப்பட வேண்டும் என மன்றுக்கு சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து அது தொடர்பான கட்டளையை பொலிஸ் மா அதிபருக்கு பிறப்பிக் கத் தேவையான நடவடிக்கையை நீதிமன்று மேற்கொள்ளும் எனக் கூறிய நீதிவான் வழக்கை, எதிர்வரும் 07ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். அத்துடன் இரு சந்தேகநபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ச)

ஐ.நா.படையில் இணைய இராணுவத்துக்கு தனி பணியகம்

கொழும்பு, பெப்.22,

ஐ.நா. அமைதிப் படை நடவடிக் கைகளில் இலங்கை இராணுவத்தி னரை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இராணுவம் தனியான நடவடிக்கைப் பணியகம் ஒன்றை உருவாக்கவுள்ளது.

குகுலேகங்கவில் உள்ள இராணுவத் தின் அமைதி ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி மையத்துக்குச் சென்றிருந்த இரா ணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அதிகாரிகள்மத்தியில்பேசும் போது இத்தகவலை வெளியிட்டார்.

இராணுவத் தலைமையகம் இதற் கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும், வெளிநாடுகளில் ஐ.நா படைகளில் இலங்கைப் படையின ரை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இந்தப் பணியகம் அமைக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

இன்று நாளும் கோளும்

22.02.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 10 ஆம் நாள்
ஸ்தமி பகல் 12.11 மணி வரை
இராகுகாலம் 01.30 - 3.00
பரணி பகல் 11.36 மணி வரை
சுபநேரம் மு.ப. 10.30 - 11.30
சித்தயோகம்
எமகண்டம் மு.ப. 06.00 - 07.30

மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்
சாதனை	சிந்தனை	சினம்	யோகம்	நன்மை	வெற்றி	பேராசை	உழைப்பு	தனம்	கவனம்	இலாபம்	போட்டி

'அரச வேலை வேண்டும்' பட்டதாரிகள் போர்க்கொடி

மட்டக்களப்பு, பெப்.22

அநீதி இழைக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி, மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி பூங்காவுக்கு முன்னால், வேலையற்ற பட்டதாரிகள், கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நேற்றுக்காலை நடத்தினர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் போது, "பட்டதாரிகளுக்கு நீதி வேண்டும்", "உடனடியாக அரச தொழில் வழங்க வேண்டும்" என வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், கிழக்கு மாகாண சபையால் நடத்தப்பட்ட ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

"ஒரே மாகாணத்தில், வேறுபட்ட வெட்டுப்புள்ளி எதற்கு?", "வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே?", "சமூகத் தலைமைகள் எங்கே?" போன்ற கோஷங்களை, பட்டதாரிகள் இதன்போது எழுப்பினர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் தொழில் கேட்டு போராட்டம் நடத்தத் தொடங்கி, நேற்றுப் புதன்கிழமையுடன் ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

மின்வேலியால் யானை பலி

கொழும்பு, பெப்.22

பொலனறுவை- அளுத்வெவ பிரதேசத்தில் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி யானை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது.

பயிர்செய்கைகளை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்வேலியில் அகப்பட்டே குறித்த யானை உயிரிழந்துள்ளது.

வஸ்கமுவ தேசிய வனத்தைச் சேர்ந்த 25 வயதான குறித்த யானை, ஒன்பது அடி உயரமானதென வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

இலங்கைப் படையதிகாரிக்கு ஐ.நா. போட்டது தடை!

கொழும்பு, பெப்.22

லெபனானில் ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவிருந்த லெப்.கேணல் ஹேவகே என்ற இலங்கை இராணுவ உயர் அதிகாரியை ஐ.நா தடுத்து நிறுத்தியுள்ளது.

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் பங்கேற்க லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த இராணுவத்தின் 150 பேர் கொண்ட அணிக்கு லெப்.கேணல் ரத்னபுலி வசந்தகுமார ஹேவகே என்ற அதிகாரி பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் 2008-09 ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர் என்றும், இவர் குறித்த மனித உரிமை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கரிசனை எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், இவரை லெபனானில் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஐ.நா தடுத்துள்ளது.

இதுகுறித்து இன்னர் சிற்றி பிரஸ் ஊடகத்துக்கு கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா பொதுச்செயலரின் பிரதி பேச்சாளர் பர்ஹான் ஹக்,

"லெபனானில் ஐ.நா இடைக்காலப் படையில் நிறுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை இராணுவ அதிகாரி, மீளாய்வு முடியும் வரை அங்கு அனுப்பப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முழுமையான மீளாய்வுக்குப் பின்னரே, அவரை அங்கு நிறுத்துவதா என்பது குறித்து முடிவு செய்யப்படும்.

இந்த இராணுவ அதிகாரியின் பின்னணி தொடர்பாக நாம் இலங்கையின் விதிவிடப் பிரதிநிதியுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்கள் எமது விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்கிறார்கள்.

மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகளை ஐ.நா மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும்.

கொள்கைகளின் அடிப்படையில், ஐ.நா. உடன் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் உயர்ந்த செயல் திறன், திறமை, நேர்மை ஆகியவற்றையும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவர்களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும் இருப்பதை உறுதிபடுத்த வேண்டியது எமது கடப்பாடாகும்" என்று தெரிவித்துள்ளார். (அ)

சாந்தை சிற்றம்பலம் வித்தியில் "செயற்பட்டு மகிழ்வோம்"

யாழ்ப்பாணம், பெப்.22

சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா, பாடசாலை அதிபர் த.ஸ்ரீகமலநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் ஐ. தயானந்தராஜா, சிறப்பு விருந்தினராக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

நேர்முகத் தேர்வுக்கு எதிராக பல்கலை ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்றும் இன்றும் இடம்பெறவிருந்த கல்வி சாரா ஊழியர்களுக்கான நேர்முக தேர்வைப் பிற்போடுமாறு கோரி, ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்கள் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வை, பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நிறுத்தி, போராட்டத்தில் ஈடுபடவுள்ளதையறிந்த பல்கலைக் கழக நிர்வாகம், தேர்வினை அருகில் உள்ள யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தது. எனினும் அதனையும் தடுத்து நிறுத்தி, திறந்த பல்கலைக் கழக வாயிலில் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"ஏற்கனவே பணியிலுள்ள ஊழியர்கள், குறைந்த கல்வித் தகைமையுடன் கூடிய அனுபவத்துடன் பணி புரிந்து வருகின்றனர்.

ஆனால் தற்போது உள்வாங்கப்படுபவர்கள் கூடிய கல்வி தகமையுடன் அதே பதவிக்கு உள்வாங்கப்படுகிறார்கள். இது எதிர்காலத்தில் ஊழியர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்துவதோடு, சம்பள உயர்வு மற்றும் தர உயர்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, ஏற்கனவே உள்ள ஊழியர்களையும் அவர்களின் சேவை கால அடிப்படையில் ஒரே தரப்படுத்தலுக்குள் உள்வாங்க வேண்டும். அதுவரையில் இந்த நேர்முக தேர்வினை பிற்போட வேண்டும்" எனத் தெரிவித்தே யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

மாணவர்களுக்கு டப்லெட்: திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, பெப்.22

உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு டப்லெட் கணினிகளை வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடைநிறுத்தியுள்ளார்.

உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 160,000 மாணவர்களுக்கும், 36,000 ஆசிரியர்களும் டப்லெட் கணினிகளை வழங்கப் போவதாக கடந்த ஆண்டு இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், இந்தத் திட்டத்தை இடைநிறுத்த அமைச்சரவை நேற்று முன்தினம் முடிவெடுத்தது.

இந்தத் திட்டத்துக்காகத் தேவைப்படும் 4 பில்லியன் ரூபா நிதியை வேறு பயனுள்ள திட்டத்துக்கு செலவிடும் நோக்கிலேயே இதனை இடைநிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இந்தத் திட்டத்தை இடைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த திட்டத்தின் கீழ், தலா 27 ஆயிரம் ரூபா பெறுமதியான டப்லெட் கணினிகளை 160,000 மாணவர்களுக்கும், 36,000 ஆசிரியர்களும் வழங்குவதற்கான நிறுவனத்தை அமைச்சரவை தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஜனாதிபதி முறையை ஒழிக்க மும்மூர்த்திகளும் விருப்பம்

கொழும்பு, பெப்.22

"நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகிய மும்மூர்த்திகளுக்கும் பூரண விருப்பம்" என்று ஜேவிபியின் முன்னாள் எம்.பி லக்ஸ்மன் நிபுணாராச்சி தெரிவித்துள்ளர்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் ஒருவகையான அரசியல் குழப்பம்-பரபரப்பு -ஏற்பட்டுள்ளது. வெற்றியடைந்த மகிந்த தரப்பு நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரி வருகின்றது. 19 ஆம் திருத்தச் சட்டத்தின் படி இப்போது நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. நான்கரை வருடங்கள் கடந்த பின்தான் கலைக்க முடியும்.

மறுபுறம், தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திரக் கட்சியும் முட்டி மோதுகின்றன. தனி ஆட்சியை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இறுதியில் எதுவும் நடக்காது. பரபரப்பெல்லாம் இன்னும் ஓரிரு நாட்களில் ஓய்ந்துவிடும் மீண்டும் பழைய அரசியல் இடம்பெறும்.

இந்தத் தேர்தல் முடிவுகளால் நாட்டுக்கு ஒரு நன்மை ஏற்படப் போகின்றது. அதுதான் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை நீக்குதல். 1978 இல் இருந்து நாம் செய்து வருகின்ற முயற்சி வெற்றி பெறப் போகின்றது. அதை நீக்குவதற்கு மைத்திரிபால விரும்புவார். அவருக்கு இனி அது தேவையில்லை. ஏனென்றால் அவரால் இனி ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாது.

இதை நீக்குவதற்கு ரணில் விக்ரமசிங்கவும் விரும்புவார். அவராலும் வெல்ல முடியாது. தேர்தல் முடிவுகள்- ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த வாக்குகள் இதைத் தெளிவாகக் கூறுகின்றன. மகிந்தவும் இனி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் அவரும் இதை நீக்குவதற்கு விரும்புவார்.

எல்லோரையும் விட இது நீக்கப்பட வேண்டும் என்று அதிகம் விரும்புபவர்கள் நாங்கள்தான். தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு முயற்சி செய்து அதில் வெற்றிகண்டதுபோல் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கும் முயற்சியிலும் நாம் வெற்றிபெறுவோம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

வலய மட்ட உதைபந்து:
உடுத்துறை, தேவரையாளி இறுதிக்கு முன்னேற்றம்

கரணவாய், பெப். 22

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் உடுத்துறை மகா வித்தியாலயம் மற்றும் தேவரையாளி இந்துக் கல்லூரி என்பன இறுதியாட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளன.

குறித்த போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுத்துறை மகா வித்தியாலயமும், நெல்லியடி மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் முதல் பாதி கோல் எதனையும் பதிவு செய்ய முடியாமல் இரு அணி வீரர்களும் திண்டாடினர்.

இருந்த போதும் இரண்டாம் பாதியில் உடுத்துறை மகா வித்தியாலய அணியின் முன்கள வீரர் கௌதமனின் அதிரடியான கோல்மூலம் அந்த அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு அரையிறுதி ஆட்டத்தில் தேவரையாளி இந்துக்கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதின. இதில் 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது தேவரையாளி இந்துக் கல்லூரி. (அ-66)

கொக்கெய்னுடன் யாழ்.வாசி கைது

கொழும்பு, பெப்.22

யாழ்ப்பாணத்திலிருந்து 20 இலட்ச ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளைக் கொண்டு வந்த நபர் ஒருவர் கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 100 கிராம் கொக்கெய்னையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் - இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதான நபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

விவசாய வேலிக்கான ஆரம்ப நிகழ்வு



வடமராட்சி, பெப்.22

கப்பூது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மற்றும் கமக்கார அமைப்பு என்ப வற்றின் ஏற்பாட்டில் ஸ்ரீ கந்தசுவாமி அரைக்கும் ஆலையும், விவசாய வேலி அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரத விருந்தினராக கலந்துகொண்டார். (அ-11)



பிறகு என்னைப் பிழை சொல்லப்படாது. சொறி.கொம்

உந்தத் தேவை இல்லாத கதையள் எல்லாத்தையும் நிப்பாட்டுங்கோ. மனுசருக்கு என்ன தேவை எண்டதை முன்னம் யோசியுங்கோ. சும்மா வாய்க்கு வந்தபடி கதைச்சிட்டுக் குண்டியைத் தட்டிப்போட்டு எழும்பிப் போனதோடை சரியே? எல்லாம் ஒழுங்காவிருமே?

சந்தேக்கை தரகு வேலை செய்யிறமாதிரி வேலை செய்யப்பிடாது. வாங்கிறவனும் விக்கிறவனும் எக்கேடு கெட்டுப் போகட்டும் என்ரை லாபம் வந்தால் சரி எண்டு யோசிக்கப்படாது. எல்லாத்திலையும் மனுசத்தன்மை வேணும்.

உப்பிடித்தான் சில ஆக்கள் நினைச்சுக் கொண்டு சீவிக்கினம். உள்ளூராட்சிச் சபை எங்களிட்டைத் தானிருக்கு. நாங்கள் தான் ஆட்சிக்குவருவம். எண்டு பிடிவாதமா இருக்கிற நீங்கள் ஆட்சியைப் பிடியுங்கோ. பறவாயில்லை. ஆனால் கட்சியை வளக்கப் பாடுபடுகிறதிலும்விட சனத்துக்கு என்ன செய்யலாம் எண்டு முன்னம் யோசியுங்கோ.

ஊரிலை எக்கச் சக்கமான பிரச்சினை கிடக்கு. முதல் றோட்டு எல்லாம் சரியாக் கிடக்கோ எண்டு பாக்க வேணும். பிறகு அந்த றோட்டெல்லாம் மழைத் தண்ணி வடியக்கூடியமாதிரிப் போட்டிருக்கினமோ எண்டு பாக்க வேணும். ஆளுக்காள் தங்கடை எண்ணத்துக்கு வரம்பு வாய்க்காலைக் கட்டி வைச்சிருக்கினம். அதைத் தடக்கெடுத்து வெள்ளத்தை வடிவாப்போகப் பண்ணினால்தான் சனத்துக்கு சுகாதாரமாச் சீவிக்கிறதுக்கு ஏலும். மழை வெள்ளம் ஓடாமல் நிண்டால் டெங்கு வரும். அதுக்கு அடுத்ததாக் கண்டபடி குப்பை போடுற வேதாளங்களை எல்லாம் ஒரு கை பாக்க வேணும். வீட்டுக் கழிவெல்லாத்தையும் சாக்கிலை கட்டிக் கொண்டு வந்து ஒண்டில் இரவிலை செக்கலுக்கை, இல்லாட்டி காலமை விடிய முன்னம் ஆற்றையேன் வெறு வளவுக்குள்ளை எறிஞ்சுபோட்டுப் போற நாதாரியளை நாய் பிடிக்க நிக்கிறமாதிரி ஒழிச்சு நிண்டு பிடிச்சுக் கொண்டு போய் கோட்டிலை 10 – 20 கட்ட வைச்சால்தான் திரிந்துவினம். இல்லாட்டி உவையின்ரை உந்த எளிய பழக்கத்தை மாத்தேலாது.

அடுத்ததாக் கட்டாக் காலி மாடுகள். அதுக்கு ஒரு வரைமுறையைக் கொண்டு வரவேணும். மாட்டுச் சொந்தக் காரரையும் கோட்டிலை காசைக் கட்ட வைச்சாச் சரி. அடுத்தது தெரு நாயள். சும்மா இரவு பகல் றோட்டிலை போக ஏலாமைக் கிடக்கு. அண்டைக்கு ஒரு மோட்டச் சைக்கிளிலை போன ஒருத்தியக் கலைச்சுக் கொண்டு வந்து அவளின்ரை சீலைத் தலைப்பை ஒரு நாய் எட்டிப்பிடிக்க அவள் உலாஞ் சுப்பட்டு விழுந்து அவளின்ரை கை சிறாம்புப்பட்டு இரத்தம் வந்திட்டுது. அதோடை சீலையும் கிழிஞ்சு, பிறகென்ன சனம் கூடி நிண்டு பரிகாரம் செய்து அனுப்பிவிட்டுதுகள். நாயைப் பாத்தால் கொஞ்சம் தள்ளி நிண்டு ஒண்டும் நடக்காததைப்போலை வேடிக்கை பாக்கிது. அதின்ரை சொந்தக்காரன் ஆரெண்டு தெரியாது. நாள் முழுக்க உப்பிடி எத்தினை நாயள் தெருவிலை படுத்திருக்கிதுகள். ஆனபடியால் அதுக்கும் ஒரு வழி பண்ணக் கிடக்கு.

அடுத்ததா பாத்தினியம். பிடுங்க வேணும் எண்ட பாடு ஐங்கரநேசனோடை போட்டிது. இப்ப ஏதோ எங்கடை மண்ணின்ரை பூர்வீகமாக வளந்திருக்கிற பூடு மாதிரி எல்லாற்றை வீட்டுக்கு முன்னாலையும், தோட்டக் காணியளுக்கு முன்னாலையும் வளந்து செழிச்சுப் போய்க் கிடக்கு. அப்ப அத்தையும் வேறை ஆர் பாக்க வேணும். உப்பிடி எத்தினையோ வேலையள் செய்யக் கிடக்கு.

வந்து, அது எங்கடை பொறுப்பில்லை, இல்லாட்டி எங்கடை வேலை அதில்லை. நாங்கள் சம்பளத்தை எடுத்துக் கொண்டிருக்க வந்தனாங்கள் எண்டு சொல்லிப் போட்டுச் சும்மா இருக்க வராதையுங்கோ. அப்பிடி எண்டால் விட்டிட்டு வீட்டிலை நிண்டு உங்கடை சோலி சுறட்டைப் பாருங்கோ. அது கடைசி குடும்பத்தையாவது வடிவாப் பாத்தவன் எண்ட பேராவது கிட்டும். இரண்டுங் கெட்டானா இருக்காதையுங்கோ. அது எல்லாருக்கும் நல்லது. சும்மா எங்கடை நேரத்தை மினைக்கெடுத்த வராதையுங்கோ. நாங்கள் குழம்பினால் நீங்கள் துண்டைக் காணேல்லை துணியைக் காணேல்லை எண்டு ஓடவேண்டி வரும். விநாசி அண்ணை உதைச் செய்வன். பிறகு என்னைப் பிழை சொல்லாதையுங்கோ. சொறி டொட் கொம்.

- வில்லங்கம் விநாசி

"இந்தியா, மேற்குலக நலன்களுக்காகவே சம்பந்தன் பேசுகிறார் தமிழருக்காகவல்ல"

யாழ்ப்பாணம், பெப். 22

'மொட்டுக்குள்ளால் தமிழீழம் மலரும் என்று பாராளுமன்றில் சம்பந்தன் கூறியது உணர்ச்சி அரசியலோ அல்லது தனது பதவி போய்விடும் என்ற பதற்றத்தின் வெளிப்பாடோ அல்ல. அவர் இந்திய மேற்குலகின் நலன டிப்படையில் நிதானத்துடன் விடுத்துள்ள ஓர் எச்சரிக்கையே' என கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்ணணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்.

கடந்த எட்டு வருடமாகக் கூறிவந்த பூகோள அரசியல்போட்டியின்யதார்த்தத்தை சம்பந்தன் தற்போதே ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அவர்,

"சமஷ்டி சாத்தியமில்லை, தமிழர் தேசத்தின் அங்கீகாரம் சாத்தியமில்லை, நடைமுறைத் தீர்வு என்ற பெயரில் சிங்களம் தருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறி வந்து ஒற்றையாட்சி அடிப்படையிலான தீர்வை ஏற்றிருக்கின்ற சம்பந்தன் திடீரென நேற்று நாடாளுமன்றில் கொதித்தெழுந்து தாமரை மொட்டுக்குள்ளால் தமிழீழம் மலரும் என்று கூறியிருக்கின்றார் என்றால் அது அவர் உணர்ச்சிவசப்பட்டு வெளியிட்ட கருத்து அல்ல. அல்லது வடக்கு, கிழக்கிலே தேர்தலில் அவருக்கு ஏற்பட்ட பின்னடைவு காரணமாக தமிழ் மக்களுடைய வாக்குகளைக் கவர்வதற்காக அவர் கூறிய கருத்தும் அல்ல. மாறாக தன்னுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவி போய் விடப்போகின்றது என்பதற்காக பதற்றத்தில் கூறிய கருத்தும் அல்ல.

மாறாக அவர் நிதானமாக மிகத் தெளிவாக தான் ஒரு இலங்கையர் என்ற அடிப்படையில் அந்தக் கருத்தை கூறியிருக்கிறார். அவர் எப்பொழுதும் தன்னை தமிழராக முன்னிலைப்படுத்தியதில்லை. சிங்கள அரசின் முகவராகவும், இந்திய மேற்கத்தைய அரசுகளின் தூதுவராகவுமே தன்னை எப்போதும் முன்னிலைப்படுத்தி வந்திருக்கிறார். அந்த நலன்களின் அடிப்படையிலேயே அவரது கருத்தும் அமைந்திருந்தது. கூட்டமைப்பினரும் அவ்வாறுதான் நடந்து கொள்கின்றார்கள்.

இந்தத் தீவை மையப்படுத்தி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பூகோள அரசியல் போட்டி அவ்வாறு செல்வதற்கு இடமளிக்காது. நிச்சயமாக மீண்டும் சீன சார்புடைய ராஜபக்சவோ அல்லது சீன சார்புடைய வேறு ஒருவரோ இந்த நாட்டின் தலைமை சக்தியாக வந்தால் இந்த நாடு பூகோள நலனின் அடிப்படையில் உடைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தமிழர்களிடம் தனிநாடாக கையளிக்கப்படும் என்பதைத்தான் சம்பந்தன் எச்சரித்திருக்கின்றார்.

அவர் தமிழ் மக்களின் நலனின் அடிப்படையில் இந்தக் கருத்தை முன்வைக்கவில்லை. இந்த நாடு இரண்டாகப் பிரிந்து விடக்கூடாது சிங்களவர்களுடைய மேலாதிக்கம், பௌத்தம் அரச மதம் என்பதற்கு தமிழர்கள் முழு அங்கீகாரம் கொடுத்து ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கும் நிலையில் வீணாக நீங்கள் இந்த நாட்டை உடைக்கப்போகின்றீர்கள் என்ற எச்சரிக்கையை இந்திய மேற்கு நாடுகளின் நலனின் அடிப்படையில் நின்றுகொண்டே அவர் கூறியிருக்கின்றார் அனைவரும் இதனை தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும்-என்றார். (ச)

மயிலிட்டி துறைமுக அபிவிருத்திக்கு நோர்வே உதவும்

அந்நாட்டு உதவி உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



காங்கேசன்துறை, பெப்.22,

மயிலிட்டி துறைமுகத்தை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய நோர்வே அரசு சுமார் ஒரு பில்லியன் டொலர் நிதியை வழங்கியுள்ளதாக அந்நாட்டின் இலங்கைக்கான உதவி உயர்ஸ்தானிகர் மொனிக்கா ஸ்வென்ஸ்கெட் தெரிவித்துள்ளார்.

வீமன்காமம் பகுதியில் நோர்வே அரசின் நிதிப்பங்களிப்பில் அறுபது லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபத்தினை நோர்வே நாட்டின் இலங்கைக்கான உதவி உயர்ஸ்தானிகர் மொனிக்கா ஸ்வென்ஸ்கெட் நேற்றுமுன்தினம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் சமூக செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த மண்டபத்தை நோர்வே அரசாங்கம் யு.என்.டி.பி ஊடாக நிர்மாணித்து வழங்கியுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (இ)

இன்றைய கேலிச்சித்திரம்



அதிகாரம் இல்லை

சட்டமா அதிபரும் உறுதிப்படுத்தினார்

கொழும்பு, பெப்.22.

பிரதமரை பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று சட்டமா அதிபர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிய நிலையிலேயே சட்டமா அதிபர் பதில் வழங்கி உள்ளார்.

இதன்படி தேசிய அரசாங்கத்தை விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகிச் சென்றால் அமைச்சரவைக்கும் பிரதமருக்கும் என்ன நடக்கும் என்பது தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோருவதற்கும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

அண்மையில் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் என்ற அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 'பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு முன்னர் இருந்தது. ஆனால், 19 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம், அந்த அதிகாரம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலமே பிரதமரைப் பதவி நீக்கம் செய்ய முடியும்' என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

வெற்றிலை மென்றபடி மீன் விற்றவருக்கு அபராதம்

ஊர்காவற்துறை, பெப்.22,

ஊர்காவற்துறை மீன் சந்தையில் வெற்றிலை மென்றவாறு கடலுணவுகளை விற்பனை செய்த பெண்ணுக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டார். ஊர்காவற்துறை மீன்சந்தையில் வெற்றிலை மென்றவாறு கடலுணவுகளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவருக்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிவான் ஏ.எம்.எம். றியாழல் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்த போது குறித்த பெண் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டர். அவரை எச்சரித்த நீதிவான், 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார். (இ)

தொடர்ச்சிகள்

மிரட்டல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழுத்தை அறுத்துவிடுவேன் என எச்சரித்தார்.

இதுபெரும் சர்ச்சையாக வெடிக்கவே, உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டார். எனினும் ஜனாதிபதி அதனைத் தடுத்திருந்தார். இந்நிலையில் அவர் திடீரெனக் கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

திருப்பி அழைக்கப்பட்டமைக்கான காரணம் தெரியாத போதும், இவ்விடயம் தொடர்பில் விசாரிக்கப்பட மாட்டார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

இதிலும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் 67 சிறுவர்கள் உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 23, கிளிநொச்சி, வவுனியாவில் தலா 13, முல்லைத்தீவில் 12, மன்னாரில் 6 சிறுவர்கள் இதில் அடங்குவர்.

கிளிநொச்சியில் 14, யாழ்ப்பாணம் 7, முல்லைத்தீவு, மன்னார் தலா 6, வவுனியாவில் 5 எண்ணிக்கையிலான சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதேபோன்று, உடல், உள ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். இவையும் யாழ். மாவட்டத்திலேயே அதிகம் இடம்பெற்றுள்ளன.

மேலும், கடந்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் மூவரும், மன்னாரில் நால்வரும், கிளிநொச்சியில் 6 பேரும், வவுனியாவில் ஒருவருமாக 14 பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

பிரியாது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீரவும் நாடாளுமன்றத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

தேசிய அரசாங்கம் தொடர்பாக உடன்பாடு இன்னமும் நடைமுறையிலேயே உள்ளது. அதனைத் திருத்துவதற்கு எந்தத் தேவையுமில்லை என்று இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய அரசாங்கத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விலகவில்லை என்று அந்தக் கட்சியின் செயலாளர் மகிந்த அமரவீர கூறினார். (இ)

ஆதரவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து எமது போராட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு ஆதரவு தர வேண்டும்.

தற்போது சர்வதேசத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. இந்நிலையில் சகலரின் ஒத்துழைப்பும் எமக்கு வேண்டும். இந்தப் போராட்டத்தில் அரச தரப்பில் நம்பிக்கை இழந்த நிலையிலேயே சர்வதேசத்தினை தலையிடுமாறு வலியுறுத்தி வருகின்றோம் - என்றும் அவர்கள் கேட்டனர். (ச)

பயங்கரவாத தாக்குதலாம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு பூச்சியத்துக்கு வந்துள்ளது என்றும், அரசாங்கம் என்று ஒன்று இல்லை என்றும் அவர் இதன்போது சாடியிருந்தார். (ச)

கலாமின் இல்லத்தில் கமலின் பயணம்

சென்னை, பெப்.22

இராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் இல்லத்தில் இருந்து நேற்றுத் தனது அரசியல் பயணத்தை நடிகர் கமல்ஹாசன் தொடங்கியுள்ளார். அப்துல் கலாம் வீட்டில் அவரது சகோதரர் முஹமது முத்து மீரான் மரைக்காயரை சந்தித்து கமல்ஹாசன் ஆசி பெற்றார்.

இதனை அடுத்து, கலாம் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பாடசாலையை வெளியே நின்று பார்த்தார். பின்னர், கமல் மீனவர்களைச் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையில், கலாம் வீட்டுக்குச் சென்றது தொடர்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் நெகிழ்ச்சியாக அவர் பதிவிட்டுள்ளார்.

"பிரமிப்பூட்டும் எளிமையைக் கண்டேன், கலாமின் இல்லத்திலும், இல்லத்தாரிடமும். அவர் பயணம் தொடங்கிய இடத்திலேயே நானும் என் பயணத்தைத் தொடங்கியதை பெரும்பேறாக நினைக்கிறேன்" என கமல்ஹாசன் பதிவிட்டுள்ளார். (அ)

ஈரானில் வீழ்ந்த விமானம் கண்டுபிடிக்கப்பட்டது

தெஹ்ரன், பெப்.22

ஈரானில் 66 பேருடன் மலையில் மோதி விழுந்து விபத்துக்குள்ளான விமானம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஈரானில் கடந்த 18 ஆம் திகதி 66 பேருடன் புறப்பட்ட விமானம் ஜாக்ரோஸ் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த அனைவரும் பலியானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், மோசமான வானிலை காரணமாக மீட்புப்பணிகளில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் விமானத்தை தேனா மலைப்பகுதியில் இராணுவ ஹெலி கொப்டர் கண்டறிந்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அரசு கூறுகையில்,

"இராணுவத்தின் ஆளில்லா விமானங்கள் மூலம் விபத்தில் சிக்கிய விமானம் குறித்து ஆய்வு மேற்கொண்டு வந்தோம். ஆய்வுகளின் அடிப்படையில் இரு இராணுவ ஹெலி கொப்டர்கள் அனுப்பப்பட்டன.

அங்கேயே தங்கியிருந்த மீட்புக்குழுவினர் பொதுமக்களின் உதவியுடன் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து ஆளில்லா விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட 500 படங்களின் உதவியுடன் விமானம் விழுந்து நொருங்கிய இடம் கண்டு பிடிக்கப்பட்டது" எனத் தெரிவித்துள்ளது.(அ)

பிரதமர் கோமாளி ஓவியருக்குச் சிறை

கோலாலம்பூர், பெப். 22

மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக்கை கோமாளி போல சித்தரித்த பிரபல ஓவியர் பாஹ்மி ரேசாவுக்கு ஒரு மாத சிறைத்தண்டனையும், 7 ஆயிரத்து 700 டொலர் அபராதமும் விதித்து நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மலேசியாவில் நஜிப் ரசாக் பிரதமராக இருந்து வருகிறார். இவரைக் கோமாளி போல சித்தரித்து பிரபல ஓவியர் பாஹ்மி ரேசா கேலிச்சித்திரம் தீட்டி இணையத்தளத்தில் வெளியிட்டார். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக அவர் மீது அங்கு உள்ள நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணையின்போது, பாஹ்மி ரேசா மீது ஆபாசமான, தவறான, அச்சுறுத்தலை ஏற்படுத்துகிற, ஒரு நபரை தொல்லை செய்ய விரும்புகிற படைப் பொன்றைப் பரப்பியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதற்கே அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.(அ)

39 மனைவிகள் போதாது இன்னும் 9 வேண்டுமாம்

கென்யா, பெப்.22

கென்யாவில் வாழும் நபர் ஒருவர் 39 பெண்களைத் திருமணம் செய்து கொண்டு 103 குழந்தைகளுக்கு தந்தையாகியதோடு, இன்னும் 9 பெண்களைத் திருமணம் செய்யப்போவதாகக் கூறியுள்ளார்.

நண்டோலியா கிராமத்தைச் சேர்ந்தவர் நபி யோகனா (வயது -68), தன்னைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தீர்க்கதரிசி ஜோனின் அவதாரம் என இவர் கூறிக் கொள்கிறார். இவர் இதுவரை 39 பெண்களைத் திருமணம் செய்து கொண்ட நிலையில் 103 பிள்ளைகளுக்குத் தந்தையாகியுள்ளார். இதோடு யோகனாவுக்கு 232 பேரக் குழந்தைகளும் உள்ளனர், இவரின் மூன்று மனைவியர் உயிரிழந்து விட்டனர்.

சிறுவயதிலிருந்து மாமிசம் சாப்பிடாத இவர் ஒருமுறை கூட முகத்தை ஷேவ் செய்து கொண்டதில்லை.யோகனா கூறுகையில்,

"நான் என் வருங்கால மனைவிகளைத் தேடிச் செல்வதில்லை, கடவுள் தான் அவர்களை என்னை நோக்கி அனுப்பி வைக்கிறார். கடவுளின் கொற்படி நான் மொத்தம் 48 பெண்களை திருமணம் செய்து கொள்ளவேண்டும். அதைச் செய்வேன்" என கூறியுள்ளார்.

தான் 280 ஆண்டுகள் வாழ்வேன் என கூறும் யோகனா அதன் பின்னர் இறந்து மீண்டும் மறுபிறவி எடுத்து அடுத்த 2700 ஆண்டுகளுக்கு வாழ்வேன் எனக் கூறுகிறார். (அ)

செல்போனுக்குத் தடை

சென்னை, பெப். 22

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் - கீர்த்தி சுரேஷ் நடித்து வரும் விஜய்யின் 62 ஆவது படத்தின் சண்டைக்காட்சிகள் வெளியாகி படக்குழுவுக்கு அதிர்ச்சியளித்த நிலையில், படக்குழுவினருக்கு புதிய தடை ஒன்று போடப்பட்டுள்ளது. அதன்படி படப்பிடிப்பு நிகழும் இடத்துக்குள் படக்குழுவினர் யாரும் செல்போனைப் பயன்படுத்தக் கூடாது என்று ஏ.ஆர்.முருகதாஸ் அறிவுறுத்தியாக தகவல் வெளியாகி இருக்கிறது. தற்போது காஞ்சிபுரம் அருகில் படப்பிடிப்பு நடத்தப்படும் நிலையில், அடுத்தகட்ட படப்பிடிப்புக்காக படக்குழு அமெரிக்கா செல்லவிருக்கிறது. (அ)

இரண்டாம் கர்ப்பம்

வடகொரியா, பெப்.22

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் 2 ஆவது முறையாக கர்ப்பம் தரித்துள்ளதாக அதிகாரபூர்வத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 11-ஆம் திகதி வரை தென் கொரியாவில் இருந்த கிம் யோ ஜாங், குறித்த தகவலை வெளியிட்டுள்ளார். கடந்த 2015 ஆம் ஆண்டு தமது முதல் குழந்தையை பெற்றெடுத்த கிம் யோ, இதுவரை தமது குழந்தை தொடர்பில் எந்தவொரு புகைப்படத்தையும் வெளியிட்டதில்லை. இதுவரை அரசின் முக்கிய விழா எதிலும் கலந்து கொள்ளாமல் இருந்த கிம் யோ, வடகொரியத் தலைவரின் நம்பிக்கையான நபர்களில் ஒருவர் என கூறப்படுகிறது.

தென் கொரிய குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதன் பின்னரே உலக ஊடகங்களுக்கு இவரது புகைப்படம் பரவலாகக் கிடைத்தது.கிம் ஜாங் உன் கலந்து கொள்ள

விருந்த நிகழ்ச்சியில் அவருக்கு பதிலாக தென் கொரியாவில் கிம் யோ கலந்து கொள்வதாக வடகொரிய அரசு தகவல் வெளியிட்டது. அதன் பின்னரே கிம் யோ ஊடகங்களுக்கு முகம் காட்டினார். சர்வதேசப் பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வடகொரியா உலக நாடுகளின் நம்பிக்கையை பெறும் பொருட்டே, கிம் யோ வை தென் கொரியாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன. இந்த நிலையிலேயே அவர் இரண்டாவது குழந்தைக்கு விரைவில் தாயாகவுள்ள தகவல் வெளிவந்துள்ளது. (அ)

நடிகர்களைச் சந்தித்த கனேடியப் பிரதமர்

புதுடெல்லி, பெப்.22

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பொலிவுட் நட்சத்திரங்களைச் சந்தித்துப் பேசியுள்ளார்.இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்தியாவின் முக்கிய பிரமுகர்களை சந்தித்துப் பேசி வருகிறார். பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு குடும்பத்துடன் வந்துள்ள அவர், தன் சுற்றுப் பயணத்தை தாஜ் மஹாலில் தொடங்கி பல முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட்டு வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மும்பையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு

நிகழ்ச்சி ஒன்றில் குடும்பத்துடன் பங்கேற்ற அவர், பாலிவுட்டின் உச்ச நட்சத்திரங்களான ஷாருக்கான், அமீர்கான், அனுபம் கெர் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசியுள்ளார். (அ)

முத்தரப்புத் தொடர் ஆஸி. வசம்

அக்லாந்து, பெப். 22

நியூசிலாந்துக்கு எதிரான இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று முத்தரப்புத் தொடரைத் தன்வசப்படுத்தியது அவுஸ்ரேலியா.

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இருபது-20 முத்தரப்புத் தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று அக்லாந்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவை எதிர்த்து நியூசிலாந்து விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பம் ஓரளவு சிறப்பாக அமைந்தது. அந்த அணி முதல் விக்கெட்டுக்காக 48 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், கப்திலை (21) இழந்தது. அவரைத் தொடர்ந்து முன்ரோ (29), வில்லியம்சன் (9), சப்மன் (8), கிராண்டொம்மி (10), சன்ட்னர் (0), செய்பெட் (3), சௌத்தீ (5), சோதி (13) ஆகியோர் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்து செல்ல, நியூசிலாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில் 150 ஒட்டங்களையே சேர்த்தது. ரெய்லர் மாத்திரம் கடைசிவரை ஆட்டமிழக்காது 43 ஒட்டங்களுடன் களத்தில் நின்றார்.

அவுஸ்ரேலியாவின் பந்துவீச்சில், அகார் 3 விக்கெட்டுகளையும், றிச்சட்சன், ரெய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்ரான்டக், ஸ்ரொய்னிஸ் ஆகியோரும் தலா ஒரு விக்கெட்டைப் பிடுங்கினர்.

பின்னர் 151 என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, தனது முதல் விக்கெட்டுக்காக 72 ஓட்டங்களைச் சேர்த்தபோது சோர்டை (50) பறிகொடுத்தது. அவரைத் தொடர்ந்து வோர்னர் (25), அகார் (2) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து ஆடிய அவுஸ்ரேலிய அணி, 14.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 121 ஒட்டங்களைச் சேர்த்திருந்தபோது, மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் தடைப்பட டக்வேர்த் லூவிஸ் முறைப்படி அவுஸ்ரேலியாவின் இலக்கு 103 ஒட்டங்களாக நிர்ணயிக்கப்பட்டு, 19 ஒட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வெற்றி மூலம் முத்தரப்புத் தொடருக்கான கிண்ணத்தையும் தன்வசப்படுத்தியது அவுஸ்ரேலியா.

ஆட்டநாயகனாக அகார் தெரிவுசெய்யப்பட, தொடர் நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார். (ஐ)

அஸ்வின் போட்ட அரசியல் டுவிட்

நடிகர் கமல்ஹாசனின் அரசியல் பிரவேசம் குறித்து இந்தியக் கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அப்துல்கலாம் இல்லத்திலிருந்து தனது கட்சிப் பயணத்தை கமல்ஹாசன் தொடங்கிய நிலையில் சுடச்சுடக் கருத்து வெளியிட்டுள்ளார் அஸ்வின்.

இது குறித்து அஸ்வின் தனது டுவிட்டர் பக்கத்தில்,

"தமிழகத்திலிருந்து மற்றொரு சூப்பர் ஸ்டார் இன்று (நேற்று) மாலை அரசியல் கட்சியைத் தொடங்குகிறார். அவரது வருகையால் அரசியல் களத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படுமா?" எனப் பதிவிட்டுள்ளார். (ஐ)

ஆசியர்களின் ஆட்டம்: அட்டவணை அறிவிப்பு

Sri Lanka Cricket

BOARD OF CONTROL FOR CRICKET IN INDIA

Bangladesh Cricket Board

கொழும்பு, பெப். 22

இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்புத் தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. முதலாவது ஆட்டத்தில் இலங்கை - இந்திய அணிகள் களம் காணவுள்ளன.

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் இருபது-20 கிரிக்கெட் முத்தரப்புத் தொடர் அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 தடவைகள் மோத வேண்டும். 'லீக்' முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

6ஆம் திகதி நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதவுள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆவதையொட்டி இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

போட்டிகள் அனைத்தும் கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெறும்.

போட்டி அட்டவணை:

மார்ச் 6 – இலங்கை – இந்தியா
மார்ச் 8 – பங்களாதேஷ் – இந்தியா
மார்ச் 10 – இலங்கை – பங்களாதேஷ்
மார்ச் 12 – இந்தியா – இலங்கை
மார்ச் 14 – இந்தியா – பங்களாதேஷ்
மார்ச் 16 – பங்களாதேஷ் – இலங்கை
மார்ச் 18 – இறுதிப்போட்டி

ஆடுவதில் சிறந்தவர்!

உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி என தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவரான கிரெம் ஸ்மித் கூறியுள்ளார்.

இந்திய - தென்னாபிரிக்கக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வரும் நிலையில் அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

"விராட் கோஹ்லியின் ஆட்டம் வியக்கும் வகையில் இருக்கிறது. அவர் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவரது உணர்ச்சி வசப்படும் போக்குத்தான் சிறந்த ஆட்டத்தை வெளிபடுத்த உதவுவதாக நினைக்கிறேன். அது மற்ற வீரர்களுக்கும் ஊடுருவி இருக்கலாம். ஆனால், கோஹ்லி தனது உணர்ச்சிவசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேவேளை, வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற மனநிலையை அணிக்கு ஏற்படுத்தி வழி நடத்திச் செல்கிறார். நீண்ட நாட்கள் இந்தியா முதலிடத்தில் இருக்கும். கோஹ்லி மிகப்பெரிய சாதனைகள் புரிவார்" என்றார். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.